Produced by Sydney West Area Health Service, Multicultural Health Network & NSW Multicultural Health Communication Service.

**HTS795 Social workers – Tamil**

# சமூக ஊழியர்கள்

## உண்மைகள்

நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருப்பது

- மனதுக்கு சங்கடமளிப்பதாய்,
- அச்சமூட்டுவதாய் மற்றும்
- அன்னியமானதாய் இருக்கலாம்.

தாம் நோய்ப்பட்டும், இயலாமலும், இன்னலிலும் மற்றும் தனிப்படுத்தப்பட்டும் இருக்கிறோம் என்பதைச் சீரணிக்க முடியாதவர்களுக்குச் சமூக ஊழியர்களால் மன ஒத்திசைவும், ஆதரவும் வழங்க இயலும்.

தமது பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதும், தமது உறவினர், செல்லப் பிராணிகள், அவரது வேலைகள் மற்றும் செலவுகளைப்பற்றிக் கவலை மற்றும் கரிசனம் கொள்வதும் இவர்களுக்குக் கடினமாய் இருக்கும்: தமது நோயால் தம்முடைய பிற்கால வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்படப் போகிறதோ என்று இவர்கள் கவலை கொள்வர்.

உரை பெயர்ப்பாளர் ஒருவரது உதவி உங்களுக்குத் தேவைப்படின், பயிற்சி பெற்ற உடல்நல உரைபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்து தரும்படி உங்கள் மருத்துவமனையைக் கேளுங்கள். இச்சேவை இலவசமானது மற்றும் இரகசியமானது. இரு மொழி தெரிந்த ஆலோசகர் ஒருவரும் கிட்டலாம்.

## சமூக ஊழியர்கள்

நோயுற்றோருக்கு அறிவுரை, ஆதரவு மற்றும் நடைமுறைக்குரிய ஒத்தாசை ஆகியவற்றை வழங்கும் பயிற்சி பெற்ற தொழிலர்களே சமூக ஊழியர்கள்.

- மருத்துவமனையில் உடல் நலமின்றி இருப்போருக்கும்
- புற நோயாளி மருத்துவமனை மற்றும் மருத்துவமனையின் இடைவிபத்தரங்கத்துக்குச் (casualty) செல்லும்போது நோயுறுவோருக்கும்

## சமுதாயப் பணித் துறை கீழ்வரும் சேவைகளை வழங்கும்

- இரகசியமாய் வைக்கப்படும் அறிவுரை
- கீழ்வருவனவற்றில் உதவி
  - ஓய்வூதியங்களும் மற்ற ஆதாயங்களும்
  - குறுகிய காலத் தங்குமிட வசதி
  - சட்ட சம்மந்தப்பட்ட விடயங்கள்

- இக்கட்டான குடும்பச் சூழ்நிலைகளில் உதவி
- பகல் நேர அமைப்புக்கள் மற்றும் தனிக்குழுக்களில் சமூக நடவடிக்கைகள்
- கீழ்வருவனவற்றுடன் தொடர்புள்ள நிறுவனங்கள்
  - மது மற்றும் போதைப் பொருட் சார்வு (dependency)
  - குழந்தைக் கவனிப்புக் குறித்த பிரச்சினைகள்
  - வீடற்ற நிலை
  - புலப்பெயர்ச்சி விடயங்கள்

## திடீர் நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட அகநிலை நோயாளிகளுக்கும் (inpatients) சமுதாய ஊழியர்கள் அறிவுரை வழங்குவர்.

உதாரணமாய்

மிக நெருங்கிய ஒருவரது மரணத்தால் பாதிக்கப்பட்டோர்.

பிரசவத்திற்கு முன்போ அல்லது பின்போ ஏற்படும் மரணங்களால் குழந்தையை இழந்த தாய்மார்கள்.

குணமாற்ற இயலாத நோயால் அவதியுறுபவர்கள் அல்லது கை, கால் இழப்பால் தமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள வேண்டியிருப்பவர்கள்.

## உங்களுக்குத் தேவைப்பட்டால் நீங்கள் சமுதாய ஊழியர் ஒருவரைப் பார்க்க வேண்டும் என்று கேளுங்கள்.

தொலைபேசி எண்கள் பிரசித்த போது சரியாக இருந்தது ஆனால் தொடர்ந்து சரிபார்க்கப்பட மாட்டாது. நீங்கள் தொலைபேசிப் புத்தகத்தில் எண்களைச் சரி பார்க்க வேண்டும்.